DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 152/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கடாங்கால் கிராமத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னால் சாட்சி சொன்னவரை எனக்கு தெரியும். நாங்கள் இருவரும் கொலை நடந்த இடத்திற்கு போகவே இல்லை. கொலை நடந்த இடம் ஏதோ முட்டம் என்று சொல்கிறார்கள். கொலை நடந்த மாதம், வருடம் எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. இறந்து போன கார்த்திக்கை எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

வாஞ்சூர் எனது ஊருக்கு பக்கத்தில் உள்ளது. எனக்கு குடிபழக்கம் கிடையாது. கணேசன் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர். அவர் எனக்கு பழக்கம் உடையவர். அந்த பழக்கத்தின் அடிப்படையில் 04.08.2019ம் தேதி ஈசிஆர் ரோட்டில் உள்ள வெட்டாறு பாலத்தில் இரவு 10.00 மணிக்கு நானும் கணேசனும்

பிராந்தியை வாங்கி கொண்டு குடிக்க உட்கார்ந்து இருந்த போது எனக்கு தெரிந்த கார்த்தியும், மகேந்திரனும் ஸ்கூட்டி பெப் வண்டியை மகேந்திரன் ஓட்ட பின்னால் கார்த்தி உட்கார்ந்து இருந்து, நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகில் வந்து சண்டை போட்டு கொண்டு இருந்தார்கள் என்றும், கார்த்திக் கணேசனுக்கு தெரிந்த நபர் என்பதால் கணேசன் சமாதானம் செய்தார் என்றும், மற்றொரு நபர் அவருடைய மைத்துனர் என்று சொன்னார் என்றும், மகேந்திரனின் மனைவி கோபித்து கொண்டு தன்னுடைய தாயார் வீட்டிற்கு வந்தது கார்திக்கினால் தான் அதனால் வெட்டாறு பாலத்திற்கு அருகில் இருந்த அம்மன் சிலைக்கு அருகில் தண்ணீர் அடித்து கொண்டிந்த மகேந்திரன் கார்த்திக்கை உன்னால் தாண்டா என்னோட பொன்டாடி என்னுடைய வீட்டிற்கு வரமாட்டுகிறாள் என்று சொல்லி கீழே தள்ளினார் என்றும், கார்த்திக் கீழே விழுந்துவிட்டார் என்றும், நாங்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டோம் என்றும், மறுநாள் கார்த்திக்கை மகேந்திரன் கீழே தள்ளி தண்ணீரில் அழுத்தி கொலை செய்துவிட்டார் என்று தெரிந்து கொண்டேன் என்றும், காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது சொல்லிவிட்டு தற்சமயம் எதிரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 152/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது உத்தமசோழபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். காவல்துறையினர் சம்மன் கொடுத்ததால் நான் இங்கு வந்தேன். கொத்தமங்களத்தை சேர்ந்த கிட்டப்பா மகன் கார்த்திக்கை தெரியாது. மகேந்திரனையும் தெரியாது. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் வேலைக்காக வெளியூர் சென்று இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

வாஞ்சூர் எனது ஊருக்கு பக்கத்தில் உள்ளது. எனக்கு குடிபழக்கம் கிடையாது. ராஜா எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர். அவர் எனக்கு பழக்கம் உடையவர். அந்த பழக்கத்தின் அடிப்படையில் 04.08.2019ம் தேதி ஈசிஆர் ரோட்டில் உள்ள வெட்டாறு பாலத்தில் இரவு 10.00 மணிக்கு நானும் ராஜாவும்

பிராந்தியை வாங்கி கொண்டு குடிக்க உட்கார்ந்து இருந்த போது எனக்கு தெரிந்த கார்த்தியும், மகேந்திரனும் ஸ்கூட்டி பெப் வண்டியை மகேந்திரன் ஓட்ட பின்னால் கார்த்தி உட்கார்ந்து இருந்து, நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகில் வந்து சண்டை போட்டு கொண்டு இருந்தார்கள் என்றும், கார்த்திக் எனக்கு தெரிந்த நபர் என்பதால் நான் சமாதானம் செய்தேன் என்றும், மற்றொரு நபர் அவருடைய மைத்துனர் என்று சொன்னார் என்றும், மகேந்திரனின் மனைவி கோபித்து கொண்டு தன்னுடைய தாயார் வீட்டிற்கு வந்தது கார்திக்கினால் தான் அதனால் வெட்டாறு பாலத்திற்கு அருகில் இருந்த அம்மன் சிலைக்கு அருகில் தண்ணீர் அடித்து கொண்டிந்த மகேந்திரன் கார்த்திக்கை உன்னால் தாண்டா என்னோட பொன்டாடி என்னுடைய வீட்டிற்கு வரமாட்டுகிறாள் என்று சொல்லி கீழே தள்ளினார் என்றும், கார்த்திக் கீழே விழுந்துவிட்டார் என்றும், நாங்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டோம் என்றும், மறுநாள் கார்த்திக்கை மகேந்திரன் கீழே தள்ளி தண்ணீரில் அழுத்தி கொலை செய்துவிட்டார் என்று தெரிந்து கொண்டேன் என்றும், காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது சொல்லிவிட்டு தற்சமயம் எதிரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.